# திருக்குறள்

## எளிய உரை – டாக்டர் வ.சுப. மாணிக்கனார்

### 17. அழுக்காறாமை

1. *ஒழுக்காறாக் கொள்க ஒருவன்தன் நெஞ்சத்து*
*அழுக்காறு இலாத இயல்பு.*

2. *விழுப்பேற்றின் அஃதொப்பது இல்லையார் மாட்டும்*
*அழுக்காற்றின் அன்மை பெறின்.*

3. *அறன்ஆக்கம் வேண்டாதான் என்பான் பிறனாக்கம்*
*பேணாது அழுக்கறுப் பான்.*

4. *அழுக்காற்றின் அல்லவை செய்யார் இழுக்காற்றின்*
*ஏதம் படுபாக்கு அறிந்து.*

5. *அழுக்காறு உடையார்க்கு அதுசாலும் ஒன்னார்*
*வழுக்கியும் கேடீன் பது.*

6. *கொடுப்பது அழுக்கறுப்பான் சுற்றம் உடுப்பதூஉம்*
*உண்பதூஉம் இன்றிக் கெடும்.*

7. *அவ்வித்து அழுக்காறு உடையானைச் செய்யவள்*
*தவ்வையைக் காட்டி விடும்.*

8. *அழுக்காறு எனஒரு பாவி திருச்செற்றுத்*
*தீயுழி உய்த்து விடும்.*

9. *அவ்விய நெஞ்சத்தான் ஆக்கமும் செவ்வியான்*
*கேடும் நினைக்கப் படும்.*

10. *அழுக்கற்று அகன்றாரும் இல்லைஅஃது இல்லார்*
*பெருக்கத்தின் தீர்ந்தாரும் இல்.*

### 17. அழுக்காறாமை – எளிய உரை

1. மனத்தில் பொறாமை இல்லாத நிலையே
ஒழுக்க நெறியாம் என்று கொள்க.

2. யார்மேலும் பொறாமை இல்லை எனின்
சிறந்த மேன்மை வேறில்லை.

3. தனக்கு நல்வளர்ச்சி வேண்டாம் என்பவனே
மற்றவன் வளர்ச்சிக்குப் பொறாமைப்படுவான்.

4. பொறாமையால் தமக்குத் தீதுவரும் ஆதலின்
பொறாமையால் பிறர்க்குத் தீது செய்யார்.

5. பொறாமையாளரைக் கெடுக்க அதுவே போதும்;
பகைவர் கெடுக்கத் தவறினும் அது தவறாது.

6. கொடுப்பதைக் கண்டு பொறாமைப்படுபவனது
சுற்றத்தாரும் உணவுஉடை இன்றி அழிவர்.

7. மனம் சுருங்கிப் பொறாமைப்படுபவனைச்
சீதேவி மூதேவியிடம் ஒப்படைப்பாள்.

8. பொறாமையாகிய பாவம் செல்வம் கெடுத்துத்
தீய வழியிலும் கொண்டுபோய் விடும்.

9. பொறாமைப்படுபவன் உண்மையில் வளர்கிறானா?
நல்லவன் கெடுகிறானா? எண்ணிப்பார்.

10. பொறாமையால் வாழ்வு விரிந்தவரும் இல்லை;
பொறுப்பதால் வளர்ச்சி குறைந்தவரும் இல்லை.

### 19. புறங்கூறாமை

1. *அறம்கூறான் அல்ல செயினும் ஒருவன்*
*புறம்கூறான் என்றல் இனிது.*

2. *அறனழீஇ அல்லவை செய்தலின் தீதே*
*புறனழீஇப் பொய்த்து நகை.*

3. *புறம்கூறிப் பொய்த்துயிர் வாழ்தலின் சாதல்*
*அறம்கூறும் ஆக்கம் தரும்.*

4. *கண்நின்று கண்அறச் சொல்லினும் சொல்லற்க*
*முன்இன்று பின்நோக்காச் சொல்.*

5. *அறஞ்சொல்லும் நெஞ்சத்தான் அன்மை புறஞ்சொல்லும்*
*புன்மையால் காணப் படும்.*

6. *பிறன்பழி கூறுவான் தன்பழி யுள்ளும்*
*திறன்தெரிந்து கூறப் படும்.*

7. *பகச்சொல்லிக் கேளிர்ப் பிரிப்பர் நகச்சொல்லி*
*நட்பாடல் தேற்றா தவர்.*

8. *துன்னியார் குற்றமும் தூற்றும் மரபினார்*
*என்னைகொல் ஏதிலார் மாட்டு.*

9. *அறன்நோக்கி ஆற்றுங்கொல் வையம் புறன்நோக்கிப்*
*புன்சொல் உரைப்பான் பொறை.*

10. *ஏதிலார் குற்றம்போல் தம்குற்றம் காண்கிற்பின்*
*தீதுண்டோ மன்னும் உயிர்க்கு.*

### 19. புறங்கூறாமை – எளிய உரை

1. ஒருவன் அறத்தைப் பழித்துத் தீமை செய்யினும்
கோள் சொல்லான் என்பது காதுக்கு இனியது.

2. அறம் அழித்துச் செய்யும் தீமையினும் தீது
புறத்தே இகழ்ந்து முன்னே புகழ்வது.

3. கோள்சொல்லி நடித்து உயிர் வாழ்தலினும்
சாவது நல்லது; அறத்தின் பயன் கிடைக்கும்.

4. எதிரே கடுமையாகச் சொல்லினும் சொல்லலாம்;
ஆளில்லாத போது கோள் சொல்லற்க.

5. இவன் நெஞ்சத்தில் நேர்மை இல்லை என்பது
கோள் சொல்வதிலிருந்து கண்டு கொள்ளலாமே?

6. பிறரது குறையை நீதேடிக் கூறின்
உன் பெரிய குறையை மற்றவர் விடுவாரோ?

7. மகிழ்ந்து பேசி நட்புச் செய்யத் தெரியாதவர்
கோள்சொல்லி நண்பரையும் பிரித்து விடுவர்.

8. பழகியவர் குற்றத்தையே தூற்றித் திரிபவர்
பழகாதவரிடம் எப்படி எப்படியோ?

9. போனது பார்த்துப் புறங்கூறுபவனை
உலகம் சுமக்கிறது; அதுவும் ஓர் அறமோ?

10. பிறர்குறை காண்பதுபோல் தங்குறை காணின்
வாழும் உயிர்க்குத் தீது உண்டோ?



7th Std - Tamil_2025_Term_I_Unit 3.indd 67 28/01/2025 15:27:27